1970 மார்ச் 16]

வருகின்றவைகளை மட்டும் வைத்துக் கணக்கிட்டால், ஆண்டுக்காண்டு நகராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிடும். கிராம வளர்ச்சித்துறையில் இயக்குநர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரியகாலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Fire accident in Ennore Thermal Power Station

* 407 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there was a fire accident in the Ennore Thermal Power Station on 13th September 1969;

(*b*) if so, the reasons therefor and the action taken thereon; and

(*c*) the extent of loss incurred?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் 13—9—1969 அன்று பிற்பகல் ஒரு சிறு தீ விபத்து ஏற்பட்டது. கட்டுமான உருக்குப் பணியில் உருக்குப் பாளங்களை ஆக்சி-அசிடிலின் வாயுவைக் கொண்டு வெட்டுகையில் உருகிய இரும்புத்துண்டு ஒன்று யூனிட் ஸ்விட்சி கியரில் வைக்கப்பட்டிருந்த தேவதாரு மரத்தாலான பெட்டியின் மீது விழுந்ததனல் அந்த தீ விபத்து நிகழ்ந்தது. அத் தீ விபத்து சிறியதேயாகும். அது உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டது.

(உ) தீ உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டதால், கருவிகளுக்குச் சேதம் எதும் ஏற்படவில்லை.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலே ஏற்பட்ட தீ விபத்தை உடனடியாக நிறுத்த முடியாத அளவிற்கு தீயணைக்கும் என்ஜின் பக்கத்திலே இல்லாமல் வெகுதூரத்திலேயிருந்து அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? தீயணைக்கும் நிலையத்தை பக்கத்திலே நிறுவ முயற்சி எடுத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, உண்மை அல்ல.

Beggar Homes

* 408 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the number of beggar homes in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) & (இ) ஆம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டம் பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. உரிய நடவடிக்கை பற்றி ஆராய தமிழக முதல்வர் விரைவில் ஒரு கூட்டம் கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளார்.

திரு. பி. எஸ். தனுஸ்கோடி : தலைவர் அவர்களே, இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற தற்போதைய சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நகரசபைகள் பிச்சைக்கார விடுதிகளை நடத்துவதற்கு அரசாங்கம் பிச்சைக்காரர் ஒருவருக்கு 15 ரூபாய் வீதம் மான்யம் அளித்து வருகிறது. பல நகரசபைகள் நடத்திவந்தாலும், சிறப்பாக, இன்னும் சீரிய முறையில் நடைபெறவில்லையென்று 'மதிப்பீட்டுக் குழு' தன்னுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறது. இவற்றைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கூட்டும் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிச்சைக்கார, அனாதை விடுதிகளை தனியார் துறையினர் நடத்த அரசு அனுமதி தருமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தனியார் இதை நடத்தி வருகிறார்கள். ஊட்டேரியிலுள்ள 'தயாசதனம்' என்ற விடுதியில் 600 பிச்சைக்காரர்களை வைத்து நடத்தி வருகிறார்கள்.

Staff of Revenue Department in Coimbatore

* 395 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the staff of Revenue Department observed 'demands day' at Coimbatore about 14th November 1969; and

(*b*) if so, the details of their demands?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அவர்களது கோரிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு :—

(1) சம்பள ஆணைக்குழுவில் அவர்களது சங்கத்திற்குப் பிரிதிநிதித்துவம் அளித்தல்.

(2) இடைக்கால நிவாரணம் அளித்தல்.

(3) அலுவலர் அந்தரங்க கோப்பு முறையை நீக்குதல்.

(4) ஆட்குறைப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வேலை கொடுத்தல்.

திரு. கே. வினயகம் : தலைவர் அவர்களே, அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானது என்பதை உணர்ந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அமல் செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று, அவ்வப்போது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எப்போதும் முயற்சி செய்து வருகிறது. இப்போது இடைக்கால நிவாரணம் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதேமாதிரியாக மற்றக் கோரிக்கைகளையும் பல்வேறு கட்டங்களிலே எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அப்படிச் செய்ய அரசு முயற்சிக்கும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS